# பொருளியல்

## திறந்த பொருளாதாரத்தின் பேரினப் பொருளாதாரச் சமநிலை



e-தக்சலாவ கல்விக்கூடம்™
The National e-learning Portal for The General Education
Start Your Learning Journey with e-thaksalawa

## திறந்த பொருளாதாரத்தின் பேரினப்பொருளாதாரச் சமநிலை

- திறந்த பொருளாதாரத்தில் பின்வரும் ***நான்கு*** துறைகள் காணப்படும்




- திறந்த பொருளாதாரத்தின் பேரினப் பொருளாதாரச் சமநிலையைப் பின்வரும் இரண்டு அணுகு முறையின் கீழ்நோக்கலாம்.

### (I) வருமானச் செலவு அணுகுமுறை (Y=E)

பொருளாதாரத்தின் மொத்தச் செலவுகள்/ மொத்தக்கேள்விக்குள் உள்ளடங்கும் விடயங்கள்

1. நுகர்வு (C)
2. முதலீடு (I)
3. அரசாங்கக் கொள்வனவுகள் (G)
4. தேறிய ஏற்றுமதி (NX)

**E=AD=C+I+G+NX**

**Y=E**

**Y=C+I+G+NX**

**C= 500 + 0.8Yd**
**T=100**
**Tr50**

**G= 150** **M=160**
**I=200**
**X=100**

**C= 500 + 0.8(Y-100 + 50)**
**C= 500 + 0.8y-80 + 40**
**C=460 + 0.8Y**

தொகுப்பு :- திரு. ஆ.பிரபாகரன் (ஆசிரியர், யா/புனித ஹென்றியரசர் கல்லூரி)
கணினி வடிவமைப்பு :- திரு. இ.சிவச்செல்வன் (ஆசிரியர், யா/நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

இதனைப் பின்வரும் அட்டவணை, வரைபடத்தின் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.

## 1. அட்டவணை

| Y | T | Tr | Yd | C | I | G | X | M | NX | E |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3000 | 100 | 50 | 2950 | 2860 | 200 | 150 | 100 | 160 | -60 | 3150 |
| 3250 | 100 | 50 | 3200 | 3060 | 200 | 150 | 100 | 160 | -60 | 3350 |
| 3500 | 100 | 50 | 3450 | 3260 | 200 | 150 | 100 | 160 | -60 | 3550 |
| 3750 | 100 | 50 | 3700 | 3460 | 200 | 150 | 100 | 160 | -60 | 3750 |
| 4000 | 100 | 50 | 3950 | 3660 | 200 | 150 | 100 | 160 | -60 | 3950 |

மேலுள்ள அட்டவணையின் படி செலவின் கூறுகளின் கூட்டுத்தொகை 3750 என்ற சமநிலைத் தேசிய வருமானத்திற்கு சமனாகக் காணப்படும்.

## 2. வரைபடம்




மேலுள்ள வரைபடத்தில் சமநிலைத் தேசிய வருமானக் கோட்டினை செலவுக்கோடு A என்ற புள்ளியில் வெட்டிச் செல்லுகின்றது. அதிலுள்ள 3750 ரூபா சமநிலைத் தேசிய வருமானம் ஆகும்.

தொகுப்பு :- திரு. ஆ.பிரபாகரன் (ஆசிரியர், யா/புனித ஹென்றியரசர் கல்லூரி)

கணினி வடிவமைப்பு :- திரு. இ.சிவச்செல்வன் (ஆசிரியர், யா/நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## (II) உட்பாய்ச்சல் வெளிப்பாய்ச்சல் அணுகுமுறை

திறந்த பொருளாதாரத்தின் உட்பாய்ச்சல் (J)

1. முதலீடு (I)
2. அரசாங்கக் கொள்வனவுகள் (G)
3. ஏற்றுமதி (X)

$$J = I+G+X$$

வெளிப்பாய்ச்சல் (w)

1. சேமிப்பு (S)
2. தேறிய வரி (NT)
3. இறக்குமதி (M)

$$W = S + NT + M$$

$$J = W$$

$$I + G + X = S + NT + M$$

பின்வரும் அட்டவணை, வரைபடத்தின் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.

### (a) அட்டவணை

| Y | T | Tr | NT | Yd | C | S | M | X | I | G | J | W |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3000 | 100 | 50 | 50 | 2950 | 2860 | 90 | 160 | 100 | 200 | 150 | 450 | 300 |
| 3250 | 100 | 50 | 50 | 3200 | 3060 | 140 | 160 | 100 | 200 | 150 | 450 | 350 |
| 3500 | 100 | 50 | 50 | 3450 | 3260 | 190 | 160 | 100 | 200 | 150 | 450 | 400 |
| 3750 | 100 | 50 | 50 | 3700 | 3460 | 240 | 160 | 100 | 200 | 150 | 450 | 450 |
| 4000 | 100 | 50 | 50 | 3950 | 3660 | 290 | 160 | 100 | 200 | 150 | 450 | 500 |

மேலுள்ள அட்டவணையின்படி 3750 ரூபா வருமானத்தில் உட்பாய்ச்சலும் வெளிப்பாய்ச்சலும் ஒன்றுக்கொன்று சமப்படுகின்றது.

தொகுப்பு :- திரு. ஆ.பிரபாகரன் (ஆசிரியர், யா/புனித ஹென்றியரசர் கல்லூரி)

கணினி வடிவமைப்பு :- திரு. இ.சிவச்செல்வன் (ஆசிரியர், யா/நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**(b) வரைபடம்**




மேலுள்ள வரைபடத்தில் உட்பாய்ச்சல் கோடும் வெளிப்பாய்ச்சல்கோடும் A புள்ளியில் ஒன்றையொன்று வெட்டிச் செல்கின்றது. அதிலுள்ள 3750 ரூபா சமநிலைத்தேசிய வருமானமாகக் காணப்படும்.

## திறந்த பொருளாதாரத்தின் மொத்தக் கேள்வியில் மாற்றத்தை ஏற்படுத்தும் காரணிகள்

1. தன்னிச்சையான நுகர்வு
2. எல்லை நுகர்வு நாட்டம்
3. தன்னிச்சையான முதலீடு
4. தன்னிச்சையான வரி
5. தன்னிச்சையான மாற்றங்கள்
6. அரசாங்கக் கொள்வனவுகள்
7. தன்னிச்சையான ஏற்றுமதி
7. தன்னிச்சையான இறக்குமதி

## நிறைதொழில் மட்ட சமநிலை உற்பத்தி (YF)

ஒரு பொருளாதாரத்தில் நிறைதொழில் மட்ட வெளியீட்டிற்கு சமனாக மொத்தக் கேள்வி காணப்படுதலை நிறைதொழில்மட்ட சமநிலை உற்பத்தி எனப்படும்.




இங்கு YF என்பது நிறைதொழில்மட்ட சமநிலை உற்பத்தியைக் குறிக்கும். இங்கு பணவீக்கமோ, பணச்சுருக்கமோ காணப்படமாட்டாது.

தொகுப்பு :- திரு. ஆ.பிரபாகரன் (ஆசிரியர், யா/புனித ஹென்றியரசர் கல்லூரி)

கணினி வடிவமைப்பு :- திரு. இ.சிவச்செல்வன் (ஆசிரியர், யா/நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## வீக்க இடைவெளியும் சுருக்க இடைவெளியும்

| வீக்க இடைவெளி | சுருக்க இடைவெளி |
|---|---|
| • நிறைதொழில்மட்ட சமநிலை வெளியீட்டினை விட உண்மை வெளியீடானது பெரிதாக இருக்கும் போது வீக்க இடைவெளி ஏற்படும். (YF < Y) | • நிறைதொழில்மட்ட சமநிலை வெளியீட்டினைவிட உண்மை வெளியீடானது சிறிதாக இருக்கும் போது சுருக்க இடைவெளி எனப்படும். |
| • இங்கு நிறைதொழில் சமநிலை வெளியீட்டினைவிட மொத்தக் கேள்வி பெரிதாகக் காணப்படும். | • இங்கு நிறைதொழில் சமநிலை வெளியீட்டினை விட மொத்தக் கேள்வி சிறியதாகக் காணப்படும். |




மேலுள்ள வரைபடத்தின் படி நிறை தொழில் மட்ட சமநிலை வெளியீட்டினை விட மொத்தக் கேள்வியான $AD^1$ பெரிதாகக் காணப்படுவதனால் A-B வீக்க இடைவெளியாக காணப்படும். அதே போல் $AD^2$ என்ற மொத்தக் கேள்வி வளையி நிறைதொழில் மட்ட சமநிலை வெளியீட்டினை விட சிறிதாகக் காணப்படுவதனால் A-C சுருக்க இடைவெளியாகக் காணப்படும்.

தொகுப்பு :- திரு. ஆ.பிரபாகரன் (ஆசிரியர், யா/புனித ஹென்றியரசர் கல்லூரி)
கணினி வடிவமைப்பு :- திரு. இ.சிவச்செல்வன் (ஆசிரியர், யா/நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk